

தோற்றம் : 23.5.1921 மறைவு : 20.3.1999

அமரர் கோ.கந்தசாமி அவர்களுக்கு தமிழர் பேரவையின் அஞ்சலி

வாழ்வில் உயர.....

"கடந்த பதினான்கு ஆண்டுகளாக தமிழர் பேரவை கல்வி உதவித்திட்டத்தை நடத்தி வருகின்றது. இந்திய பிள்ளைகளிடையே கல்வியின் முக்கியத்துவத்தை நாம் எப்பொழுதும் வலியுறுத்தி வந்துள்ளோம். கல்வி தேர்ச்சி முலமே இந்தியர்களின் பொருளாதார நிலையை நாம் உயர்த்த முடியும்.

தேர்வில் சிறப்பான மதிப்பெண்கள் பெற்று முன்னேறுவது நல்லது. ஆனால் அது ஒரு வழிதான், கல்லூரிகள் அல்லது பாலிடெக்னிக்கில் மேல்நிலைக் கல்விக்கு இடம் கிடைக்காதவர்கள், உயர்ந்த தொழிலியல் கல்வி பெற முயற்சி செய்ய வேண்டும். இதை இந்திய பெற்றோரிடமும் மாணவரிடமும் நாம் வலியுறுத்த வேண்டும்.

தமிழர் பேரவையின் கல்வித் திட்டத்தை ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்புடையதாக மாற்ற வேண்டும்."

கோ.கந்தசாமி

கந்தாவின் கனவை நனவாக்குவோம்.....

தமிழர் பேரவையின் முன்னாள் தலைவரும் ஆலோசகருமான நமது மதிப்பிற்குரிய கோ.கந்தசாமி அவர்கள் 20.3.99 அன்று காலமானார்கள். அவரது மறைவு நமது சமுதாயத்திற்கு மட்டுமல்ல; சிங்கப்பூருக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

தொழிற் சங்கவாதி, அரசியல்வாதி, சமூகத் தலைவர் என்னும் பல நிலைகளில் அரை நூற்றாண்டுக்கு மேல் அரும்பாடுபட்டுப் பணியாற்றிப் புகழ் படைத்தவர் அவர்.

தொழிற் சங்கப் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்த போதிலும் இந்தியர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் முப்பது ஆண்டுகளுக்குமேல் அவர் ஆற்றியுள்ள பணிகள் அளப்பிடற்கரியவை.

அவர் 1968 இல் உருவாக்கிய இந்தியர் கல்வி அறக்கட்டளை வருவாய் குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மாணவர்கள் உயர்கல்விபெற நிதியுதவி செய்திருக்கிறது.

தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்களின் மறைவுக்குப்பின் தொய்வுற்றிருந்த தமிழர் பேரவைக்குப் புத்துயிர் அளித்து, அதன் வளர்ச்சிக்குப் பணியாற்றினார். 1978 முதல் 1997 வரை ஏறக் குறைய இருபதாண்டுக் காலம் அதன் தலைவராக இருந்து, இந்திய சமூதாயத்திற்குக் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களுக்கு அவர் ஆற்றிய தொண்டை நாம் மறக்க முடியாது.

திரு.கந்தசாமி அவர்கள் தமிழர் பேரவையின் தலைவராகப் பொறுப்பேற்ற போது, அதன் நிதிநிலை நூறு வெள்ளிக்கும் குறைவாகவே இருந்தது. இப்போது பேரவையின் நிதி நிலை, மூன்று இலட்சத்தைத் தாண்டி நிற்கிறது. இதற்கு முழுமுதற் காரணம் நமது முன்னாள் தலைவர். கந்தசாமி என்று சொன்னால் அது மிகையாகாது.

ஏழைக் குடும்பங்களுக்கு எப்படி உதவலாம் என்பதே அல்லும் பகலும் அவர் சிந்தனையாக இருந்தது. அந்தச் சிந்தனையின் விளைவாக உதித்ததே தமிழர் பேரவை பன்னோக்குக் கூட்டுறவுக் கழகம். இந்தக் கூட்டுறவுக் கழகம் 1994 இல் தோற்றுவிக்கப்பட்டது.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று எண்ணி அயராது உழைத்தவர். இந்தியர்கள் - குறிப்பாகப் பின் தங்கிய நிலையில் உள்ளவர்கள் வாழ்க்கையில் முன்னேறிப் பீடு நடை போட வேண்டும் என்று எண்ணியவர். அதற்குக் கல்வியே அடிப்படை என்று உறுதியாக நம்பியவர். அந்த எண்ணத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கப் பாடுபட்டு வெற்றியும் கண்டவர் திரு. கந்தசாமி அவர்கள்.

'ஏழை எளியோர்க்கு உதவ வேண்டும்; சமுதாயத்தை உயர்த்த வேண்டும்' என்னும் அவரது கனவை நனவாக்கத் தொடர்ந்து பாடுபடுவதே நாம் அவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

To Fulfill Kanda's Dreams.....

The death of our ex-President and Advisor, the late G.Kandasamy on 20th March 1999, is a loss not only to our community but also to Singapore.

Kandasamy tirelessly served as a trade unionist, politician and community leader for over 50 years and was greatly appreciated and well known for all his contributions.

Though he was engaged deeply in trade union work, he had taken great pains to serve the Indian community, particularly in the field of education, for over 30 years. His services and contributions cannot be easily enumerated.


In 1968 he helped to launch the Singapore Indian Education Trust (SIET), to assist financially needy Indian children in their pursuit of education. Hundreds of students, since then, have benefited from SIET and gone on with tertiary level education.

After the death of the late G.Sarangapany, (who was also well-known for his community service), who was the preceding president of TRC (then known in Tamil as Thamizhar Pirathinithithuva Sabai), TRC was rejunevated by the leadership of Kandasamy. From 1978 to 1997, for about 20 years, Kandasamy led TRC to serve the needs of the Indian community, especially the Tamil speaking community.

At the time when Kandasamy took office in TRC, the account balance was less than $100/- Now it has an accumulate amount of over $300,000/-. It would not be an exaggeration to say that the credit for this achievement rests with our late G.Kandasamy.

The thoughts frequently running in his mind was how to uplift the educational performance of Indian children from low-income families. He firmly believed that only through education Indian children can succeed and attain higher status in society. He had, indeed, transformed his thoughts into successful action by the many examples of his work he left behind.

'To serve the needy; To uplift the community' were his constant dreams. To fulfill his dream and to truly dedicate to his memory, would be for all of us to continue with his work.



பேரவையின் முத்தமிழ் விழாவில் திரு கந்தா

அமரர் கோ.கந்தசாமி கல்வி அறநிதி

இந்தியரின், குறிப்பாகத் தமிழர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அயராது உழைத்த, தமிழர் பேரவையின் முன்னாள் தலைவர் அமரர் கந்தசாமி அவர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி அவரது இலட்சியம் நிறைவேறத் தொடர்ந்து பாடுபடுவதுதான். அதுவே அவருக்கு நிலையான நினைவுச் சின்னமாக- நமது நன்றியுணர்வின் அடையாளமாக அமையும்.

எனவே, திரு கந்தசாமி அவர்களின் மறைவுக்காக கடந்த 3.4.99 அன்று தமிழர் பேரவை எற்பாட்டில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் தமிழர் பேரவைத் தலைவர் திரு. பாகேசவன் "கோ. கந்தசாமி அவர்களின் பெயரால் ஒரு கல்வி அறநிதித் திட்டத்தை உருவாக்க வேண்டும்" என்று கூறினார். இந்த நிதிக்குக் குறைந்த பட்சம் ஒரு லட்சம் வெள்ளி சேர்க்க வேண்டும் என்றும், கந்தசாமி அவர்கள் உருவாக்கிய சிங்கப்பூர் இந்தியர் கல்வி அறக்கட்டளை (SIET) இதனை நிர்வகிப்பது பொருத்தமாக இருக்கும் என்றும் திரு.பா.கேசவன் தெரிவித்தார்.

இதனைப் பல்வேறு அமைப்புக்களின் தலைவர்களும் தமிழ்ப் பெருமக்களும் வரவேற்று பாராட்டினர். திரு.கந்தசாமி அவர்களின் மகனும் மகளும் இந்தத் திட்டத்தை உளமார வரவேற்றனர்.



முத்தமிழ் விழாவில் அமைச்சருடன் திரு கந்தா

இரங்கல் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய கடைய நல்லூர் முஸ்லீம் லீக் செயலாளர் திரு.மு.அ.மசூது இந்தக் கல்விநிதிக்கு 1001 வெள்ளி கொடுப்பதாக அறிவித்தார்.

சிங்கப்பூர்த் தமிழிலாளர்களின் முன்னேற்றத் திற்காகவும் சிங்கப்பூர் இந்தியர்களின் முன்னேற்றத் திற்காகவும் ஓயாது உழைத்த திரு கந்தசாமி அவர்களின் பெயர் சிங்கப்பூர் வரலாற்றில் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. எனினும், சிங்கப்பூர் இந்தியப்பிள்ளைகள், குறிப்பாகத் தமிழ் பேசும் குடும்பத்துப் பிள்ளைகள் உயர்கல்விகற்று, வாழ்க்கையில் உயர்வதற்காக வாழ்நாள் முழுதும் அயராது பணியாற்றிய திரு கந்தசாமி அவர்களுக்கு நாம் அமைக்கும் நிலையான நினைவுச் சின்னமாக இந்த "கோ.கந்தசாமி கல்வி அறநிதி" திட்டம் அமையும்.

நமது உறுப்பினர்களும் பொதுமக்களும் இந்த திதிக்குத் தாராளமாக நன்கொடையளித்து உதவ வேண்டும். அதுவே, நாம் நம் கந்தாவுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலி.



திரு கந்தா அவர்களுக்குப் பேரவையின் பாராட்டு

கோ. கந்தசாமி அவர்களுக்கு இரங்கல் கூட்டம்

தமிழர் பேரவையின் முன்னாள் தலைவரும் ஆலோசகருமான அமரர் கோ. கந்தசாமி அவர்கள் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் தேதி காலமானார்கள்.

நாட்டுக்கும் சமூகத்திற்கும் கோ. கந்தசாமி அவர்கள் ஆற்றிய 50 ஆண்டுக்காலப் பணிகளை நினைவுகூர்ந்து அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் இரங்கல் கூட்டம் கடந்த 3-4-99 அன்று மாலை 6.00 மணிக்கு, சிங்கப்பூர்த் தமிழர் இயக்க அண்ணா இல்லத்தில் நடைபெற்றது. தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பேரவையின் இணைப்புச் சங்கங்களையும் பிற அமைப்புகளையும் சேர்ந்த பலரும் கலந்துகொண்டு கந்தசாமி அவர்களின் பண்புகளையும் பணிகளையும் பாராட்டிப் பேசினார்கள். அவர்களுள் நாடாளுமன்ற நியமன உறுப்பினர் திரு ஸ்ரீனிவாச ராய் அவர்களும் ஒருவர்.





கூட்டத்தின் இறுதியில் தமிழர் பேரவைத் தலைவர் பா. கேசவன் முன்மொழிந்த பின்வரும் இரங்கல் நீர்மானம் நிறை வேறியது.

"தொழிற் சங்கத்துறையிலும் சமுதாயத்துறையிலும் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் பணியாற்றி, சமுதாயத்தின் அடித்தள மக்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டு உழைத்த தமிழர் பேரவையின் முன்னாள் தலைவரும் ஆலோசகரும் முதுபெரும் தொழிற்சங்கவாதியுமான அமரர் கோ.கந்தசாமி அவர்களின் மறைவு சிங்கப்பூருக்கும், இந்திய சமுதாயத்திற்கும், குறிப்பாகத் தமிழர் சமுதாயத்திற்கும் பேரிழப்பாகும்.

அவரது மறைவால் ஆழ்ந்த துயருறுவதோடு, அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும் இந்தக் கூட்டம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."



தமிழ் வளர.....

"பல இன, பல மொழி சமுதாயமான சிங்கப்பூரில் தமிழ் அதிகாரத்துவ மொழிகளில் ஒன்றாக இருப்பது ஒரு கலாசார சொத்து எனலாம். இதைக் காத்துக் கொள்ள நம்மால் ஆன அனைத்தையும் செய்ய வேண்டும். பள்ளிகளில் செய்தித் தாட்களில், அதிகாரத்துவ அலுவலகங்களில் தமிழின் நிலையை அரசாங்கம் உறுதியாக்கியுள்ளது. இம்முயற்சியை நாம் வரவேற்கிறோம்.

பள்ளிகளில் தமிழ் கற்பிப்பதோடு மட்டும் அல்லாது, உள்ளூர் பல்கலைக் கழகங்களிலும் தமிழில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளை உருவாக்குவதன் வழி தமிழ் மொழியை நாம் மேலும் வளர்க்க முடியும்.

நமது இல்லங்களில், கோயில்களில் மற்றும் பொது இடங்களிலும், தமிழில் பேசி, தமிழைப் பயன்படுத்தி, தமிழ் மொழியை வளர்க்க நமது சமூகமும் முயற்சி எடுக்க வேண்டும்."

கோ.கந்தசாமி

Designed & Printed by Graphic's Zone Tel :256-5747